புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# இனவரைவியல் நோக்கில் சோளகர் தொட்டிப் புதினம்

**ஆய்வாளர்**

ஆ.தீபிகா, முனைவர் பட்ட ஆய்வாளர்,

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர்-641 043.

**நெறியாளர்**

முனைவர் ச.பிரியதர்ஷினி,

உதவிப் பேராசிரியர் (தமிழ்த்துறை),

அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,

கோயம்புத்தூர்-641 043.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித இனம் என்பது பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாகும். பல நிலைகளில் மாற்றங்களை ஏற்று வாழும் மனித சமூகத்தில் பழங்குடி மக்கள் நாகரிக உந்துதல்களுக்கு ஆட்படாமல் காடுசார்ந்த பொருட்களைச் சேகரித்தல், வேட்டைத்தொழில், மேய்ச்சல், இயற்கை விவசாயம் ஆகிய தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களிடம் இடம், மொழி, சூழல், வீட்டின் அமைப்பு, உடையமைப்பு, உணவு முறை, மருத்துவம், புழங்குபொருட்கள், பஞ்சாயத்துமுறை போன்ற செய்திகள் மனித வரலாற்று வளர்ச்சியின் தனித்துவங்களைப் பெற்றிருக்கின்றன.தமிழக கர்நாடக எல்லையில் மிகவும் சொற்பமான எண்ணிக்கையில் வாழும் ஆதிப்பழங்குடி

இனத்தவர்களே சோளகர் என்றழைக்கப்படுகின்றனர். 1990 களில் வீரப்பனைத் தேடி காட்டுக்குச் சென்ற தமிழக மற்றும் கர்நாடக அதிரடிப்படை காவல்துறையினரால் கொடூர தாக்குதல்களுக்கும் வன்கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட சோளக மக்களைப் பற்றிய பதிவே 'சோளகர் தொட்டி' என்னும் புதினம் சோளர் இன மக்களை காடுகளையே தங்கள் உறவாகவும் கடவுளாகவும் பாவித்து இயற்கையோடு இயைந்த அற்புதமான வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். மனித வரலாற்று வளர்ச்சியின் படிநிலையில் மக்களின் வாழ்வியலும் அவர்களைப் பற்றிய ஆய்வுகளும் நம் கவனத்தைக் கோருகின்றன. அவ்வகையில் இனக்குழு சமுதாயமாக வாழும் சோளகர் இன வாழ்வியலை இனவரைவியல் நோக்கில் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

**முன்னுரை**

ஆண்டாண்டுக் காலமாக காட்டை ஆண்ட சோளகர் இன மக்களின் கதறல்களை காட்டிற்குச் வெளியே பேசும் நூல்தான் சோளகர் தொட்டி, சேளாகர் என்ற பழங்குடி மக்களின் வாழ்வியலும் அவர்கள் மீது வன்மையாக நிகழ்த்தப்பட்ட வன்கொடுமைகளின் பதிவே இப்புதினம். வீரப்பனைத் தேடும் பணியில் ஈடுபட்ட அதிரடிப்படையினர் விசாரணை என்ற பெயரில் பழங்குடி இன மக்கள் மீது நிகழ்த்திய மனிதநேயமற்ற அத்துமீறல்களை படைப்பாளர் பதிவு செய்துள்ளார். பழங்குடியின மக்களின் பூர்விக நிலத்தை அபகரிக்க உயர்குடி மக்கள் செய்யும் தந்திரங்களும், அவர்கள் தங்கள் சுயலாபங்களுக்காக அரசு இயந்திரத்தை அப்பாவி மக்கள் மீது ஏவுவதையும் படைப்பாளர் பதிவு செய்துள்ளார். அரசியல், கருத்தியல், அதிகாரம் மற்றும் கலாச்சார மட்டங்களிலிருந்து தூர விலக்கி வைக்கப்பட்டுள்ளவர்கள் சோளகர் இன மக்கள். அவர்களுடைய வாழ்வும் வாழ்வாதாரமும் வனத்தைச் சார்ந்தே உள்ளது. ஆடம்பரமில்லாமல் அடிப்படைத் தேவைளை மட்டுமே நிறைவு செய்து கொள்ளும் எளிமையான மக்களே சோளகர்கள். அவ்வகையில் வனத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்த சோளகர் இன மக்களின் வாழ்வும் வளமும் எத்தகையது என்பதனை இனவரைவியல் நோக்கில் இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

**இனவரைவியல் விளக்கம்**

இனவரைவியல் என்ற சொல் ஆங்கிலத்தில் எத்தினோகிராபி *(ethnography)* என்றழைக்கப்படுகிறது. *Ethnography* என்ற சொல்லை *ethnos* மற்றும் *graphy* என்று பிரிக்கலாம். *Ethnos* என்பதுஇனம் என்ற பொருளையும் *graphy* என்பது வரைதல் அல்லது எழுதுதல் என்று பொருள்படும். எனவே ஒரு குறிப்பிட்ட மக்களினத்தைப் பற்றி எழுதுவதே இனவரைவியல் என்று அறியலாம். தமிழில் இனவரைவியலுக்கு பல அறிஞர்கள் பல்வேறு வரையறைகள் அளித்துள்ளனர். அவற்றுள் ஆ.தனஞ்செயன் மற்றும் பக்தவத்சல பாரதி அளிக்கும் வரையறைகள் முதன்மை பெறுகின்றன.

***“குறிப்பிட்ட இடப்பரப்பில் வாழும் இனக்குழு மக்கள் அல்லது குறிப்பிட்ட சாதியினர் அல்லது ஓர் ஊர் என்னும் எல்லைக்குள் பரஸ்பரப் பகிர்வுகளோடும் முரண்களோடும் வாழும் பல்வேறு சாதியினர் அல்லது பால், வயது, தொழில் என்பன போன்ற கூறுகளின் அடிப்படையில் தனித்து நோக்கப்படும் குழுவினர் போன்ற மக்களின் வாழ்க்கையில் தானும் ஒருவனாக வாழ்ந்து அல்லது பங்கேற்று உற்று நோக்கியதன் அடிப்படையில் பெற்ற அனுபவங்களை திரட்டிய பண்பாட்டுத் தரவுகளையும், தனது சமூகமயமான நோக்கத்தை மையப்படுத்தி ஒருவன் படைக்கும் இலக்கிய வடிவத்தையே இனவரைவியல் இலக்கியம் என்று சிறப்பு முன்னொட்டுக் கொடுத்துக் குறிப்பிடலாம்”***

***(விளிம்புநிலை மக்கள் வழக்காறு, ப.7)***

*என்று ஆ.தனஞ்செயன் அவர்கள் இனவரைவியலுக்கு விரிவானதொரு வரையறை அளிக்கின்றார். ஓர் இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்று இனவரைவியலை எளியமையாக குறிப்பிடலாம்.*

***“இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துக்கொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதலாகும்”***

***(பண்பாட்டு மானிடவியல், ப.105)***

*என்று பக்தவத்சல பாரதி இனவரைவியலுக்கு விளக்கமளிக்கிறார். மேலும் அவர், ஆய்வாளர்கள் சமூக ஒழுங்குமுறை, பண்பாட்டு ஒழுங்குமுறை ஆகிய இரண்டையும் தர்க்கப் பார்வையோடும் அரத்தப்பார்வையோடும், பொருள் கோலோடும் இனவரைவியலை அணுகினால்தான் இனவரைவியல் ஒரு கலையாக மிளிரும் என்கிறார். அவ்வகையில் சோளரக் தொட்டி புதினத்தில் இடம்பெறும்143 சோளகர் இன மக்களைப் பற்றி இனவரைவியல் நோக்கில் இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*

**சோளகர் பெயர்க்காரணம்**

*சோளகர் இன மக்கள் தங்களுடைய ஊரைத்* ***‘தொட்டி’*** *என்றழைக்கிறார்கள். சோலை (காடு) என்பது சோள என்று மருவியுள்ளது. சோளகர் வாழும் சுமார் நாற்பது குடும்பங்கள் அடங்கிய ஊரே சோளகர் தொட்டி எனப்படுகிறது. சோலைகளில் வசிப்பதால் சோளகர் எனவும் அழைக்கப்படுகிறார்கள்.*

***“சோலையை ஆண்டவன்டா நாம் அதுதான் சோளகன்று எங்கப்பன் சொல்லுவான்”***

***(சோளகர் தொட்டி, ப.101)***

*என்னும் ஜோக்கமாளின் கூற்றிலிருந்து பழங்காலத்தில் சோலையை ஆண்டதால் சோளகர் என்று பெயர் பெற்றதாக அறியலாம். இம்மக்கள் திராவிட மொழிக்குடும்ப மொழிகளில் ஒன்றான சோளக மொழியைப் பேசுகின்றனர்.*

**குடியிருப்பு**

*சோளகர் இனமக்கள் குடிசை வீடுகளை அமைத்து வாழ்கிறார்கள். மூங்கில் தப்பைகளை பாயாய் பிணைந்து அதில் செம்மண் பூசிய சுவர்களை நிறுத்தி குடிசைகள் அமைத்திருக்கிறார்கள். இயற்கைச் சீற்றங்கள், வனவிலங்குகளின் தாக்குதல்கள் ஆகியவற்றிலிருந்து தற்காத்து கொள்ளவியலா பலவீனமான குடியிருப்புகளை அமைத்துக் கொள்கிறார்கள்.*

*தொட்டியிலிருந்து வனத்தைப் பிரிப்பதற்காக ஒரு பச்சைநிறத்திலான ஓர் அளவைக்கல் வனத்துறையினரால் நடப்பட்டுள்ளது. வனத்தில் உள்ள நீராதாரங்கள் வற்றிவிட்டால் ஊரின் வன எல்லைக்கு தண்ணீர் குடிக்க காட்டு விலங்குகள் வந்து செல்கின்றன.*

***"தொட்டியிலிருந்து எட்டிப் பிடிக்கும் தூரத்திலேயே வனத்தின் எல்லை இருந்தது"***

***(சோளகர் தொட்டி, ப.27).***

*சோளக மக்கள் பிற பழங்குடியின மக்களைப் போன்று வனத்திற்குள் வாழவில்லை. அவர்கள் தங்கள் வசிப்பிடங்களை வனத்தை ஒட்டியே அமைத்துக் கொள்கின்றனர்.*

**தொழில்**

*சோளக இன மக்களின் முதன்மையான தொழில் வேளாண்மை. காடுகளில் மூலிகை சேகரித்தல், தேன்னெடுத்தல், கிழங்கு அகழ்தல், விறகு சேகரித்தல் ஆகிய தொழில்களையும் மேற்கொள்கிறார்கள். ஆண், பெண் என்று இருபாலரும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். வள்ளிக் கிழங்கு, சர்க்கரைக்கிழங்கு ஆகியவைகளை மண்ணிலிருந்து எடுத்து உண்ணுகின்றனர்.*

**வேளாண்மை**

*சேளாகர் இன மக்கள் வேளாண்மையை பிரதானத் தொழிலாக கொண்டுள்ளனர். பொதுவாக சேளாகர் தொட்டியில் மூன்று முறை அறுவடை செய்த நிலத்தில் மீண்டும் விதைக்க மாட்டார்கள். வேறொரு நிலத்தை விதைப்பதற்கு தயார் செய்வார்கள். புதிய நிலத்தில் மூன்று முறை அறுவடை செய்தபின் மீண்டும் பழைய நிலத்தை விதைப்பிற்காக பக்குவப்படுத்துவார்கள். மூன்று முறைக்கு மேல் விதைத்தால் பூமியில் பயிர்கள் உருவாகுவதற்கான ஆற்றல் குன்றியிருக்கும்144 என்பதால் இந்தச் சுழற்சி முறையைப்*

*பின்பற்றுகிறார்கள். சிறிய கொத்துக் கருவியின் உதவியுடன் நிலத்தைக் கொத்தி ராகியை விதைக்கிறார்கள்.*

***“காத்தவர் தின்னது போக…***

***கண்டவர் தின்னது போக…***

***கள்ளர் தின்னது போக …***

***விளையனும், விளையனும்… சாமி”***

***(சோளகர் தொட்டி, , ப .55)***

*என்று விதைப்பின் போது வேண்டிக்கொள்கிறார்கள். பிறர் உண்பது போக தமக்கு கிடைத்தால் போதும் என்னும் பரந்த எண்ணத்தைக் கொண்டுள்ளனர்.*

***நீராதாரங்கள்***

*சோளகர் இன மக்கள் தொட்டியின் எல்லைக்கு அருகில் இருக்கும் தண்ணீர் குட்டையை பாறைக்குழிக் குட்டை என்கிறார்கள். மழைக்காலங்களில் அந்தப் பாறைக்குழிகள் மழைநீரைத் தேக்கும் வடிகாலாகப் பயன்படுகிறது. கடுமையான வறட்சியிலும் கூட அப்பாறைக் குழிகளில் நீர் வற்றாமல் இருப்பதால் வன விலங்குகளும் தண்ணீர் குடிக்க அங்கு வருவதுண்டு காட்டின் வழியாக சோளகணை செல்லும் வழியில் சுனைநீர் மடுவு இருக்கின்றது. பெரும் பாறைகளின் நடுவே கசிந்து வருகின்ற நீரானது சிறிய பள்ளத்தில் தேங்கி நின்று வறட்சி காலங்களிலும் தொட்டிக்கு நீராதாரமாகக் திகழ்கிறது.*

***காடு சார் பொருளாதாரம்.***

***மூங்கில் சேகரிப்பு***

*சேளாக இன மக்கள் குடிசை கட்டுவதற்கும் வேலியமைப்பதற்கும், உடைந்த வேலியை மீட்டுருவாக்கம் செய்வதற்கும் பாங்காட்டிற்குச் சென்று மூங்கில்கள் சேகரித்து வருகிறார்கள்.*

***கிழங்கு அகழ்தல்***

*வனத்தில் மழை பெய்து விவசாயம் ஏமாற்றம் அளித்து விட்டால் கிழங்கு எடுப்பதற்காக பெண்கள் காட்டிற்குள் செல்கிறார்கள். கிழங்கின் வேர்ப்பகுதியை நான்கு அடிக்குமேல் தோண்டி எடுக்கிறார்கள். வேரிலிருந்து ஒரு அடியை விட்டுவைத்து மற்ற அடிப்பகுதிக் கிழங்குகளை எடுத்துக்கொள்கிறார்கள். விட்டுவைத்த ஒரு அடி கிழங்கைச் செடியுடன் சேர்த்து மீண்டும் மண்ணிலேயே புதைத்துவிடுகிறார்கள்.*

*பெண்கள் வேளாண்மையில் ஈடுபடுவது, காட்டுப் பொருட்களை சேகரித்தல் ஆகியவை மூலம் இம்மக்கள் ஆதியில் தாய்தலைமைச் சமூகங்களாக வாழ்ந்துள்ளனர் என்பது அறியலாகிறது.*

**வேட்டையாடுதல்**

*சிக்குமாதா சிறந்த வேட்டைக்காரனாகத் திகழ்கிறான். கடமான் ஒன்றை வேட்டையாடுவதற்காக விரட்டிச் சென்றபோது புதரிலிருந்து எதிர்ப்பட்ட இணைக்கரடிகள் அவனைத் தாக்க முற்படுகின்றன. கரடி அவனுக்கு வேட்டை இரையாக இல்லாவிட்டாலும் தற்காப்பிற்காக வேறுவழியின்றி சுட்டு வீழ்த்துகிறான். அவனது வீரத்தை அவனுடைய மனைவி கெம்பம்மாளைத் தவிர யாரும் பாராட்ட முன்வரவில்லை. ஏனென்றால் அம்மக்கள் அடிப்படைத் தேவைக்கன்றி வேறு எந்த காரணத்திற்காகவும் விலங்குகளை கொல்லுதல் கூடாது என்று நம்புகின்றனர்.*

> **“ஜடையன் சாமி அவன் காட்டில் வேட்டையை எல்லை வகுத்து வைத்துள்ளான். சோளகன் அவனுக்கு தேவையும் கொன்றால் ஜடையனின் கோபப்பிற்கு ஆளாக வேண்டி வரும்”**
>
> **சேளாகர் தொட்டி, ப.*26*)**

*சேளாகர் இன மக்கள் குறைந்த நுகர்வு பழக்கம் உடையவர்கள் என்பதை அறியலாம்.*

***தலைமைப் பொறுப்புகள்***

**கோல்காரன்**

*சோளகர் இன மக்களது ஊரில் கோயில் வழிபாடுகள், சடங்குகள் முதலியவற்றில் முடிவெடுக்கும்146 அதிகாரத்தைக் கோல்காரர் பெற்றிருக்கிறார். வளைந்த நெடிய கோல் அவருடைய ஆயுதமாகக் கருதப்படுகிறது. வளைந்த சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த முன்னோர்களின் ஆள் உயரக்கோலை வைத்திருக்கும் உரிமை கோல்காரருக்கு வழங்கப்படுகிறது.*

*கோல்காரன் மணிராசன் கோயில் திருவிழாவின் போது பத்து நாட்கள் பூசை செய்து விரதமெடுக்க வேண்டும் கட்டுக்கோப்பாக விரதமெடுக்காவிட்டால் கோலைத் தொடக்கூடாது என்ற விதியுடன் செயல்படுகிறார்கள்.*

**கொத்தல்லி**

*சேளாகர்களின் ஊர் தலைமைப் பொறுப்பாளரை கொத்தல்லி என்றழைக்கின்றனர். பொதுவாக வயதில் மூத்த அனுபவமுள்ளவரே கொத்தல்லியாக*

*நியமிக்கப்படுவர். ஊரின் அனைத்து செயல்பாடுகளையும் கொத்தல்லி தான் முடிவு செய்கிறார்.*

***வழிபாட்டு மரபுகள்***

***ஜடை சாமி***

*ஜடைசாமியின் கோயில் சோளகர்களின் வனத்திற்குள் அமைந்துள்ளது. சோளகர் இனமக்கள் நல்லதை நினைத்து வேண்டுவதற்காகவும், நன்றிக்கடனை வெளிப்படுத்துவதற்கும் ஜடைசாமிக்கு படையல் இட்டு வழிபடுகிறார்கள்.*

***மணிராசன் கோயில்***

*முன்னோர் வழிபாடு மணிராசன் கோயிலில் நிகழ்கிறது. மணிராசன் கோயிலில் கழுத்தளவு சிலை ஒன்று மரத்தால் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கழுத்தளவு147 சிலையே மணிராசன் சிலையாகும். முறுக்கிய மீசையுடனும் திறந்த கண்களுடனும் மணிராசனின் உருவம் அமைந்திருக்கின்றது. வெங்கலத்தாலான மாட்டின் சிலை ஒன்று இருக்கின்றது. மாட்டின் கழுத்தில் கட்டுகின்ற உருண்டை மணிகள்* ***கோயிலில்*** *குவிந்திருக்கின்றன. மணிராசன் சிலைக்கு முன்னால் ஒரு வில்வ மரம் இருக்கின்றது. வில்வ மரத்தைச் சுற்றி கற்கள் குவிந்திருக்கின்றன. வில்வ மரத்திற்கு முன்பாக இருக்கும் குழியை கெப்பைக்குழி என்கிறார்கள்.*

> ***"எலும்புக் குழியில் அந்த தொட்டியின் முன்னோர்களின் எலும்புகள் கிடந்தன. தொட்டியின் குடிகள் எந்த மண்ணில் புதைக்கப்பட்டால் மணிராசன் திருவிழாவில், இறந்த முதலாம் ஆண்டு அவனின் எலும்புக் குழியில் விழும்போதுதான் இறந்தவன் சமாதனமடைகிறான் என்ற விதியின்படி இறந்தவனின் ஆவி சூறாவளிக் காற்றாய் சுழன்று கோல்காரனினுள்ளோ அல்லது அவனைச் சார்ந்த பூசிப்பவனுக்குள்ளோ புகுந்து எழுந்து நின்று இறந்தவனின் குடும்பத்திற்கு நீதி வழங்குவது வாடிக்கை.***
>
> ***(சோளகர் தொட்டி – 37)***

*எலும்புக்குழியில் எலும்பு விழுந்த பின்பு சுழன்று வராத மனிதன் நீதி வாழ்க்கை வாழ்ந்திருக்க மாட்டான் என்று குலத்தவர்கள் பழித்து147விட்டு போய்விடுவார்கள். மணிராசன் கோயிலில் நடக்கும் இந்த முன்னோர் வழிபாட்டு சடங்கானது சோளகர் வழிபாட்டு மரபில் முக்கிய பங்கு வகிக்கின்றது.*

***எங்குசீர்குட்டை பெண் தெய்வ வழிபாடு***

*சோளகர்கள் தங்கள் பூமியில் மழை பெய்ய வேண்டி எங்குசீர்குட்டை என்ற பெண் தெய்வத்தை வழிபடுகிறார்கள். மழை தெய்வமாகிய எங்குசீர்குட்டையை நினைத்து வனத்திலுள்ள தாண்ரி மரத்தில் வழிபாட்டை நிகழ்த்துகிறார்கள். தொட்டிப் பெண்கள்*

*அனைவரும் வீட்டிலுள்ள தானியங்களில் உணவு செய்து மூங்கில் கூடைகளிலும், முறங்களிலும் எடுத்துக்கொண்டு வனத்திற்குச் செல்கிறார்கள். தொட்டி ஆண்கள் அனைவரும் மணிராசன் கோயிலில் நின்று பெண்களை வழியனுப்புகிறார்கள்.*

*மரங்களடர்ந்த வனத்தில் தங்களது ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக நிற்கிறார்கள். வானத்தைப் பார்த்து எங்குசீர்குட்டை என்ற மழை தெய்வத்தை நினைத்து "மழை பொழிதாயே மழைபொழி" என்று வேண்டுகிறார்கள். பெண்கள் நிர்வாணமாக நின்று ஆடிப்பாடி மழை தெய்வத்தை வேண்டினால் மழை பெய்யும் என்று அவர்கள் நம்புகின்றனர்.*

***'வடஅமெரிக்காவில் கதிர்கள் நோயினால் பாதிக்கப்பட்டால், மாதவிலக்கு கொண்ட பெண்கள் ஆடையின்றி வயல்வெளியில் இரவில் நடந்துத் திரிவர்" இத்தகைய பழக்கங்கள் ஐரோப்பிய உழவர்களிடம் இன்றும் காணப்படுகிறது"***

***(அடித்தள மக்கள் வரலாறு, ப.188)***

*என்று ஆ.சிவசுப்பிரமணியம் பதிவு செய்கிறார். பெண்கள் இவ்வாறு நிர்வாணமாக நின்று சடங்குகள் நடத்துவது பெண்களை தெய்வீக நிலை படைத்தவர்கள் என்று பழங்குடியின மக்கள் நம்பிக்கையாகும். ஆண்கள் தவிர்ந்து கருவிகள் இன்றி பெண்கள் நிர்வாணமாக நின்று சடங்குகள் செய்வது தாய்வழிச் சமூகத்தின் எச்சங்களாக இருப்பதைக் காணலாம்.*

***மகப்பேறு***

*சோளாகர் பெண்கள் தங்கள் முதல் குழந்தையை தாய்வீட்டில் தான் பிரசவிக்கிறார்கள். குடிசையின் நடுவிட்டத்தில் ஒரு கயிறைக் கட்டுகிறார்கள். பிரசவ வலியுடைய பெண் அந்தக் கயிற்றைப் பிடித்துத் தொங்குகிறாள். துணையாகப் பிரசவம் பார்க்கின்ற மருத்துவச்சியும் இருக்கிறார்கள். மருத்துவச்சி விளக்கெண்ணையை வயிற்றில் தடவி விடுகிறாள். சூடான தண்ணீரையும், ஆமணக்கு எண்ணெய்யையும், சீலைத் துணியையும் கருவியாகப் பயன்படுத்துகிறார்கள். மருத்துவச்சி கர்ப்பிணியின் வயிற்றில் நீவியப்படி சில மந்திரங்களை முணுமுணுக்கிறாள். கர்ப்பிணி தனது வயிற்றிலிருந்து வெளித் தருகின்ற குழந்தையை மருத்துவச்சி பக்குவமாய் பெறுகிறாள்.*

*பிறந்த குழந்தைக்கு முதலில் அதன் வாயில் மலைத்தேனை இரண்டு சொட்டு விடுகிறார்கள். மலைத்தேனைச் சுவைத்த பிறகுதான் குழந்தை தாயிடம் சீம்பால் குடிக்கிறது.சோளர் இன மக்கள் குழந்தைப் பிறந்த பின்பு தீட்டு கழிக்கும் சடங்கினைச் செய்கின்றனர்.*

***"குழந்தை பிறந்த தீட்டை நாளையே கழித்துக்கொள். அதற்காக ஐந்து குலத்துகார்களுக்குச் சொல்லி விடு. நாளை வீட்டை சாணத்தால் மெழுகி பின் ஐந்து***

***குலத்தவர் முன்னால் திருநீறு பூசி தாயையும் குழந்தையும் வீடு அழைத்துக் கொள்ளலாம்”***

***(சோளகர் தொட்டி – 26)***

*என்று கொத்தல்லி கூறுவதிலிருந்து சோளகர் இன மக்களின் பிறப்புச் சடங்குகளை அறியலாம். சோளகர்களின் திட்டு என்னும் கருத்தாக்கம் தாய்வழிச் சமூகம் தந்தைவழிச் சமூகமாக மாற்றம் பெற்றுள்ள சூழலையும், தந்தை வழிச் சமூக மாற்றத்தின் ஆதிக்கத்தையும் அறிய முடிகின்றது.*

**கல்வி**

*இன்றைய காலச் சூழலில் சோளகர் இன மக்கள் பலரும் கல்வி கற்க முன்வருகின்றனர். ஆனால் புதினத்தில் இடம்பெறும் காலச் சூழலில் பெரும்பான்மையான மக்கள் கல்வி கற்காதவர்கள் என்பது அறியலாகிறது. சோளர்கள் தங்கள் குழந்தைகளை மாவிள்ளம் ஊரில் அமைந்துள்ள உண்டு, உறைவியல் பள்ளியில் படிக்க வைக்கின்றனர்.*

**திருமணம்**

*சோளகர் இன மக்கள் தம் இனத்திற்குள்ளாகவே காதல் திருமணங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். பெண் ஆணைவிட வயதில் இளையவளாக இருக்க வேண்டும் என்கிற வேறுபாடு அவர்களிடம் இல்லை.*

***“எனது இளையவனை இவளுக்கு மணம் முடிக்க முடியாது. அவன் கெம்பம்மாவை விட ஏழுவயது சிறியவன், கோல்காரன் கத்தினான், “எப்போது வயது பார்க்கும் முறை நம் தொட்டியில் வந்தது”.***

***(சோளகர் தொட்டி – 65)***

*என்னும் கோல்காரனின் கூற்றிலிருந்து வயது பார்க்கும் வழக்கம் சோகர்களிடம் இல்லை என்பது அறியலாகிறது.சேளாகர்கள் பெண் கேட்டு வரலாமா என்பதற்கு பதில் விதை தானியம் கேட்டு வரலாமா என்கிறார்கள்.*

*பெண்ணுக்கு பரிசபணம் கொடுத்து மணம் செய்கிறார்கள். பரிசபணம் அவரவர் வசதிக்கேற்ப முடிவு செய்யப்படுகிறது. மூத்த மகன் இறந்துவிட்டால் அவனது இரண்டாவது மகனுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள். திருமண வீட்டின் வாசலில் வெள்ளை நாகமரத்தின் ஒன்பது கவை குச்சிகளையும் ஒன்பது பச்சை மூங்கில்களையும் சேர்த்து பந்தல் அமைக்கிறார்கள். அந்தப்பந்தல் ஆளுயரத்திற்கு அமைந்திருக்கிறது. பந்தலின் மேல்பரப்பு முழுவதிலும் நாக இலைகள் நிரம்பியிருக்கிறார்கள்.*

*மணமகன், மணமகள் இருவர் தலையிலும் காட்டு மல்லிகையினால் ஆகிய சரத்தைக் கட்டியிருக்கிறார்கள். பீனாச்சியும் தப்பும் இசைக்க மாப்பிள்ளை மணிராசன் ஊர்வலம் தொடங்குகிறது.*

*மணப்பெண்ணின் வீட்டு வாசலில் மணமகன் நிற்கிறான். மணமகனின் அருகிலிருந்த பெண் கையிலிருந்த மூங்கில் தட்டில் வெற்றிலைப்பாக்கு, சீப்பு, கண்ணாடி, சீலை, தாலி ஆகியவற்றை வைத்திறுக்கிறான்.*

> ***"மணமகன் மணப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று அவனது சுண்டுவிரலை தன் சுண்டு விரலுடன் நாகஇலை பந்தலுக்கு அழைத்து வருகிறான். கோவணத்துடன் நின்ற கோல்காரன் முன்னோர்களின் கோலை உயர்த்தி மந்திரத்தை முணுமுணுத்து பின்னர் மணமகன் தாலி கட்டுகிறான்."***
>
> ***(சோளரக் தொட்டி, 67)***

*திருமணத்தன்று மணமகன் வீட்டார் ஊரார் அனைவருக்கும் அரிசிச்சோறும், கறி விருந்தும் அளிப்பார்கள். அன்றைய நாள் இரவை உக்கத்தீ ஏற்றி ஆட்டமும் பாட்டமுமாய் கொண்டாடுவார்கள்.*

**முடிவுரை**

*சமகாலத்தில் வாழ்கின்ற பழங்குடி மக்களைச் சக மனிதர்களாக ஏற்று அவர்களது இயற்கையான வாழ்வியல் உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும். வனங்களை ஆக்கிரமிக்கிற எதிர்மறை பொருளாதாரக் கொள்கைகளால் வளங்களில் ஒத்திசைந்து வாழும் பழங்குடியின் மக்களது வாழ்வும் கேள்விக்குறியாகிறது.*

*பழங்குடிமக்களின் வாழ்விடச் சூழல் பெரும்பாலும் நகரமயமாதலை நோக்கி நகர்ந்து வருகின்றது. அவர்கள் சமூகத்தின் மட்டங்களிலிருந்து தூர விலக்கி வைக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறார்கள். எனவே அவர்கள் ஒடுக்குமுறைக்கு எதிராக போரிடம் போராளியாக மாற்றம் பெற்று வருகின்றனர்.*

*நாம் 'மனிதர்கள் இல்லாத காடு' என்னும கோட்பாட்டினை நோக்கி நகர்வதைத் தவிர்த்து 'பழங்குடிகள் கானகத்தின் குழந்தைகள்' என்னும் கருத்தியலை கொண்டிருக்க வேண்டும். அவர்களுக்கான வாழிடங்கள், மனித உரிமைகள் ஆகியவை வழங்கப்பட வேண்டும். பழங்குடிகள் இழந்த வாழ்வினை நாம் மீட்டுத் தருவதே அவர்களின் வருங்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் பேருதவி ஆகும்.*

**தொகுப்புரை**

*சமூகத்திலுள்ள எல்லா பிரச்சினைகளும் இலக்கியத்தில் இடம் பெறவில்லை. இருப்பின் நாம் உற்றுநோக்கி திருந்திக் கொள்ள பல கருத்தாக்கங்கள் இலக்கியங்களில்*

இடம் பெற்றுள்ளது. பல ஆண்டுகளாக இலக்கியங்களில் பதிவு செய்யப்படாதவர்கள் சோளகர்கள். ஆகையால் பாலமுருகனின் சோளகர் தொட்டிப் புதினம் சோளகர் இன மக்களின் இனவரைவியலாகவும், வாழ்வியல் போராட்டங்களை பேசும் களமாகவும் அமைகின்றது.

சுதந்திர இந்தியா என்னும் கருத்தின் முன்னும் பின்னும் ஏராளமான பழங்குடி மக்கள் பல நெருக்கடிகளை சந்தித்துள்ளனர். அவ்வகையில் அரசு இயந்திரங்களால் வன்முறைக்குட்படுத்தப்பட்ட சோளக மக்களின் இனவரைவியல் நோக்கில் இக்கட்டுரை ஆய்வு செய்துள்ளது. பணம் தரும் முறையில் வனங்களை பராமரித்தல் என்னும் கொள்கை பழங்குடி மக்கள் வாழ்விற்கு தீங்கானது என்பதை இப்புதினம் பதிவு செய்கிறது. எனவே இக்கட்டுரையில் சோளக இன மக்கள் பற்றி இனவரைவியல் நோக்கில் சமூகத்தின் கவனத்தைக் கோருகிறது. பழங்குடி மக்களைப் பற்றி பழங்குடிகள் அல்லாதோர் களஞ்சியங்கள், கண்காட்சிகள், இலக்கியப் படைப்புகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவை ஆதரிக்கபட வேண்டும். இவைப்போன்ற செயல்களே அவர்களுடைய வாழ்வில் நேர்மறையான வெற்றியைத் பெற்றுத் தரும்.

**துணை நூற்பட்டியல்**


*1.சோளகர் தொட்டி, ச.பாலமுருகன்,. வனம் வெளியீடு, 96 நியூ ஸ்கீம் ரோடு, பொள்ளாச்சி – 642 002 முதற்பதிப்பு – 2004*

*2.அடித்தள மக்கள் வரலாறு, ஆ.சிவசுப்பிரமணியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 098, முதற்பதிப்பு, மே – 2016*

*3.விளம்புநிலை மக்கள் வழக்காறுகள் (இனவரைவியல் ஆய்வு) ஆ.தனஞ்செயன், , நியூ செஞ்சூரி புக் ஹவுஸ், (பி) லிட், 41-பி சிட்கோ இண்டஸூடிரயில் எஸ்டேட், அத்தூர், சென்னை முதற்பதிப்பு – 2015*

*4.பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சலபாரதி, வெளியீடு – அடையாளம், 1205/1, கப்பூர் சாலை புத்தாந்தம் – 621310. முதற்பதிப்பு – 2010*

*5.அடியும் முடியும் க.கைலாசபதி, , காலச்சுவடு பதிப்பகம், காலச்சுவடு பப்ளிக்கேஷன்ஸ், (பி) லிட், கே.பி.சாலை, நாகர்கோவில் – 629001 முதற்பதிப்பு, 1970*